# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029134

1. District : கோவை மாவட்டம் PS: ஊ.த.க. பிரிவு Year: 2017 FIR No.: [illegible] Date: [illegible] 30/11/2017
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: u/s. 7, 12, 13(2) r/w Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 13(1)(d) of PC Act and Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 109 IPC. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 7.11.17 நாள் வரை –
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் 7.00 Hrs நேரம் வரை 23.30 Hrs.
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.11.17 நேரம் 17.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.11.17 நேரம் 17.00 Hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம், சுமார் 35 kms, வடக்கு.
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : தி. C. பிரகாஷ் (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் இந்திரன்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : காவல் (g) Address : காவல் துணை கண்காணிப்பாளர்,
தொழில் முகவரி ஊ.த.க. பிரிவு, கோவை.
கண்காணிப்பாளர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) [illegible], சார்பதிவாளர், மேட்டுப்பாளையம் சார் பதிவாளர் அலுவலகம், கோவை மாவட்டம்.
2) [illegible], கதவு எண்: 15 [illegible] 51, [illegible], மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : கைப்பற்றப்பட்ட பணம்
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ. 60,000/- [ரூபாய் அறுபது ஆயிரம் மட்டும்]

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 30.11.17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 30.11.17

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30/11/2017, 18.00 Hrs.

Name: பெயர் [illegible]
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் நிலைய ஆய்வாளர்
ஊ. த. க. பிரிவு,
கோவை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>சமர்பிக்கப்படுகிறது:</u>

<u>Contents of FIR in Cr.No.8/2017/AC/CB u/s 7, 12, 13(2) r/w 13(1)(d) of PC Act and 109 Cr.P.C</u>

கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் வட்டம், மேட்டுப்பாளையம் to கோயம்புத்தூர் ரோட்டில் அமைந்துள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் சையத் இப்ராஹிம் என்பவர் மூலமாகவும், நேரடியாகவும் சார் பதிவாளர் கையூட்டு பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 29.11.2017 ந் தேதி 17.00 மணி முதல் 23.30 மணிவரை கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளராகிய நான் சாட்சிகள் 1) திரு.கு.சுப்ரமணியன், உதவி பேராசிரியர், (ஆங்கிலத்துறை), அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர். 2) திரு.ப.சுபாஷ்சந்திரபோஸ், சார் ஆய்வாளர், நவீன நகர மறுநில அளவை அலுவலகம், கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர், திருமதி.பரிமளாதேவி, ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவ், கோவை மற்றும் காவலர்கள் ஆகியோருடன் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டோம். அலுவலக முன் அறையில் இருந்த திரு.சையத் இப்ராகிம் என்பவரை அந்த அறையின் இடது பக்கம் தெற்குபுறமாக உள்ள சார்பதிவாளர் அறைக்கு அழைத்து சென்று அங்கிருந்த சார்பதிவாளர் திரு.மா.தமிழ்செல்வனிடம் என்னையும் சாட்சிகளையும் அறிமுகம் செய்து வைத்த பின் அந்த அறையில் வைத்து திரு.சையத் இப்ராஹிமை விசாரித்த போது அவர் தனது பேண்டின் இடது பக்க பின் பாக்கெட்டில் இருந்து கத்தையாக பணம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 2000 ரூபாய் நோட்டுக்கள் 29 எண்ணிக்கையிலும், 500 ரூபாய் நோட்டுக்கள் 3- எண்ணிக்கையிலும், 100 ரூபாய் நோட்டுக்கள் 5- எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் ரூ.60,000/- இருந்தது. இந்த பணத்தை பற்றி கேட்க அவர் இந்த பணமானது பத்திர எழுத்தர் திரு.சாமிநாதன் என்பவரது மகன் திரு.பிரவீன் என்பவர் அவரது ஆவண எழுத்தர் அலுவலகம் மூலமாக இன்று பத்திரபதிவிற்கு வந்த ஆவணத்திற்கு சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக தன்னிடம் கொடுத்த பணம் என்று தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.60,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் தனது முன்பக்க பாக்கெட்டுகளில் இருந்து கொத்து சாவிகளை அரசு சாட்சிகள் முன்பு எடுத்து ஆஜர் செய்தார். அந்த சாவிகளை பற்றி கேட்டபோது அவர் அதில் இந்த அலுவலகம் (சார்பதிவாளர் அலுவலகம்) மற்றும் அருகே உள்ள பழைய சார்பதிவாளர் அலுவலக சம்மந்தமான சாவிகள் அதாவது பழைய கட்டிடத்தின் பழைய

ஆவணங்கள் வைத்துள்ள அறை சாவி, அந்த அலுவலகத்தின் இடது புறமுள்ள மதிய உணவு உண்ணும் அறையின் சாவி, அலுவலக வளாகத்தின் மெயின் கேட்டின் சாவி, புதிய கட்டிடத்தின் நுழைவு வாசல் (கிரில் கேட்) சாவி, அந்த கட்டிடத்தின் உள்ள ஆவண அறைக்கு செல்லும் முதல் வாசல் சாவி, மற்றும் அதற்குள்ளே உள்ள இரண்டாவது வாசலின் சாவி ஆகியவை இருந்தது. அவரது கைவசம் இருந்த சாவிகளை வைத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் அலுவலகத்தின் பூட்டுகளை திறந்து பார்த்த போது அனைத்தும் திறந்தது. அந்த சாவிகள் அனைத்தும் இரண்டு-மூன்று வருடங்களாக அவர் தான் வைத்து பராமரித்து வருவதாகவும் இந்த விபரம் அலுவலகத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் தெரியும் என்றும் தெரிவித்தார். மேலும் திரு.சையத் இப்ராகிம் என்பவரை விசாரித்த போது அவர் தான் 10 வருட காலமாக இந்த அலுவலகத்தில் ஈ.சி போடும் வேலையை செய்து வருவதாகவும், தற்போதுள்ள சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வன் பொறுப்பேற்ற பின்பு பத்திர எழுத்தர்கள் கொடுக்கும் பணத்தை தன்னிடம் வாங்கி வைத்து கொள்ள சொல்லியுள்ளதாகவும், அது போல் தானும் அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கி வைப்பேன் என்றும், அவ்வாறு வாங்கி வைக்கும் பணத்தை சார்பதிவாளர் தமிழ்செல்வன் அலுவலகம் முடித்து வீட்டிற்கு செல்லும் போது அவரிடம் கொடுப்பேன் என்றும், அது போல் இன்று 29.11.2017-ம் தேதி திரு.சாமிநாதன் ஆவண எழுத்தரின் மகன் திரு.பிரவீன் என்பவர் சார்பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய பணம் கொடுப்பார் என்று தெரிந்ததால் தான் சார்பதிவாளர் அலுவலகத்தின் அருகே கிருஷ்ணசாமிநாயுடு சந்தில் உள்ள அவரது அலுவலகத்திற்கு இன்று மதியம் சென்று பணம் ரெடியா என்று கேட்டதாகவும், அதற்கு அவர் பார்ட்டி பணம் எடுப்பதற்காக வங்கிக்கு சென்றுள்ளார் என்றும் வந்தவுடன் தருகிறேன் என்று சொன்னதாகவும், பின்னர் மாலையில் திரு.பிரவின் என்பவர் தன்னை சந்தித்த போது பணம் ரெடியா என்று கேட்ட போது அவர் பணம் கொண்டு வந்துள்ளேன் என்று சொன்னதாகவும், நான் அவரை புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டிடத்திற்கு வடக்கு பக்கம் உள்ள அலுவலக பயன்பாட்டில் இல்லாத பழைய சார்பதிவாளர் அலுவலக கட்டிடத்தின் உள்ளே இடது பக்கம் உள்ள அறைக்கு அழைத்து சென்ற போது அவர் என்னிடம் சார்பதிவாளருக்கு உள்ள பணம் என்று சொல்லி ரூ.60,000/-ஐ எடுத்து தந்ததாகவும், தான் அதை வாங்கி எண்ணிப்பார்த்து தனது பேண்டின் இடது பக்க பின்பாக்கெட்டில் வைத்து கொண்டு சிறிது நேரம் கழித்து அலுவலக அறைக்குள் வந்ததாகவும் தெரிவித்தார். சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வனை விசாரித்த போது சையத் இப்ராஹிம் என்பவர் இந்த அலுவலகத்தில் வேலை செய்யவில்லை என்றும், வில்லங்க சான்று போடுவதற்காக மட்டும் அலுவலகம் வருவார் என்றும் அவரது கையில் அலுவலக சாவிகள் அனைத்தும் வந்தது எவ்வாறு என்று தனக்கு தெரியாது என்றும், அது அலுவலக உதவியாளர் திரு.பழனிச்சாமி என்பவரது பொறுப்பு என்றும் தெரிவித்தார். அலுவலக உதவியாளர்

திரு.பழனிச்சாமி என்பவரை விசாரித்த போது திரு.சையத் இப்ராஹிம் என்பவரிடம் சாவிகள் கொடுத்தது தவறு தான் என்றும், நம்பிக்கையின் பேரில் கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேலும் திரு.அஸ்வின் (பிரவீன் பிரகாஷ் என்ற பெயரை கெஜட்டு மூலம் அஸ்வின் என்று பெயர் மாற்றப்பட்டது), குணசேகரன், சையத் இப்ராஹிம் ஆகியோர்களை விசாரித்து அப்போது தயார் செய்து வந்த நடவடிக்கையிலேயே அவர்கள் சொன்ன விபரங்கள் பதிவு செய்யப்பட்டது. அதன் படி கீழ் கண்ட விபரம் தெரியவந்தது. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சிக்கதாசம்பாளையம் கிராமம் மகாதேவபுரம் மேற்புறம் அமைந்துள்ள மாதையன் லே அவுட்டில் நகராட்சி டி.எஸ்.நம்பர் பி.24/102-பார்ட்டில் உள்ள மனையிட பிரிவில் 2264 சதுர அடிகள் விஸ்தீரணம் உள்ள இடம் மற்றும் அதில் உள்ள ஆர்.சி.சி. கட்டிடத்தை திருமதி. கே.ராஜாமணி கணவர் பெயர் கிருஷ்ணசாமி (எ) கிருஷ்ணன் என்பவரிடமிருந்து ரூ.18,63,000/-க்கு விலைபேசி கிரையம் செய்வதற்காக ஒரு வாரத்திற்கு முன்பு திரு.குணசேகரன் என்பவர் சாமிநாதன் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்று அங்கு சாமிநாதனின் மகன் அஸ்வின் (பிரவீன் பிரகாஷ் என்ற பெயரை கெஜட்டு மூலம் அஸ்வின் என்று பெயர் மாற்றப்பட்டது) மற்றும் அவரது அப்பா சாமிநாதன் என்பவரை அணுகி சொத்து விபரங்கள் கூறி அதற்கான கிரயப் பத்திரத்தை தயார் செய்து பத்திர பதிவு செய்ய உதவி செய்யும்படி கோரியுள்ளார். அஸ்வின் பத்திரம் தயார் செய்து விட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் விசாரித்துவிட்டு முத்திரைத்தாள் பத்திரம் வாங்கவேண்டிய தொகையையும் பதிவு கட்டணத்தையும் சொல்லுவதாக சொல்லியுள்ளார். இது சம்மந்தமாக அஸ்வின் சார்பதிவாளர் தமிழ் செல்வனை சந்தித்து அரசு வழிகாட்டி மதிப்பு பற்றி கேட்டபோது அவர் இடத்தை நேரில் பார்த்து விட்டு தான் சொல்ல முடியும் என்று கூறியுள்ளார். பின்னர் சார்பதிவாளரை 27.11.2017-ம் தேதி அஸ்வின் அழைத்து சென்று இடத்தை காட்டியபோது அவர் சொத்தை மாதையன் லே-அவுட் என்று தான் பதிவு செய்ய முடியும் என்றும் மாதையன் லே-அவுட் மேற்கு புறம் என்று பதிவு செய்ய முடியாது என்றும் தெரிவித்துள்ளார். மாதையன் லே-அவுட் மேற்கு புறம் என்று பதிவு செய்ய வேண்டுமானால் சார்பதிவாளர் அவருக்கு தனியாக ரூ.75,000/- வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இந்த விபரத்தை திரு.குணசேகரனுக்கு அஸ்வின் தெரிவித்த போது அவர் தனது சொத்து உண்மையில் மாதையன் லே-அவுட் மேற்கு புறம் தான் அமைந்துள்ளது என்றும் பிறகு எதற்கு அவருக்கு பணம் தரவேண்டும் என்றும் அவரிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் அஸ்வினிடம் கூறியுள்ளார். அதற்கு அஸ்வின் மீண்டும் சார்பதிவாளரை சந்தித்து விட்டு கூறுவதாக சொல்லியுள்ளார். பிறகு மீண்டும் அஸ்வின் 28.11.2017-ம் தேதி சார்பதிவாளரை சந்தித்த போது அவர் மீண்டும் ரூ.75,000/- வேண்டும் என்று கேட்டுள்ளார். அஸ்வின் குறைக்க சொன்னதின் பேரில் இறுதியாக ரூ.60,000/- என்று குறைத்து அதற்கு மேல் குறைக்கமுடியாது என்றும் பணம் கொடுத்தால்தான் மாதையன் லே-அவுட் மேற்கு புறம்

என்று பதிவு செய்ய முடியும் என்றும் சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வன் கூறியுள்ளார். இந்த விபரத்தை குணசேகரனிடம் அஸ்வின் தெரிவித்த போது அவர் ஏற்கனவே வீட்டு உரிமையாளருக்கு அட்வான்ஸ் தொகை ரூ.8,51,000/- கொடுத்து விட்டதாகவும் வேறு வழியின்றி பதிவு செய்ய ஒப்புக் கொண்டுள்ளார். 29.11.2017-ம் தேதி காலை சுமார் 8.30 மணிக்கு அஸ்வின் சார்பதிவாளரை அவரது தொலைபேசி மூலம் அழைத்த போது பிஸியாக இருந்தது. சிறிது நேரத்தில் அஸ்வினை சார்பதிவாளர் திரும்ப அழைத்தபோது அஸ்வின் அவரிடம் பார்ட்டி பணம் ரூ.60,000/- கொடுக்க சம்மதித்த விபரத்தை சொல்லியுள்ளார். அப்போது சார்பதிவாளர் அஸ்வினிடம் பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பே பணம் கொடுத்து விட வேண்டும் என்றும், பத்திரத்தின் டிராப்டை அவரிடம் காண்பித்து அவர் சரிபார்த்த பின்பு பதிவு செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார். அஸ்வின் பத்திரம் ரெடி செய்து விட்டு 29.11.2017ம் தேதி மதியம் சுமார் 2 மணிபோல் சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வனை சந்தித்து அதை அஸ்வின் காட்டியுள்ளார். அவரும் அதை சரிபார்த்து சரியாக உள்ளது என்று கூறி பத்திரம் ரெடி செய்ய சொல்லி பணத்தை மதிய உணவு வேளையில் அவரிடம் கொண்டு வந்து கொடுக்க சொல்லியுள்ளார். சுமார் 2.30 மணிபோல் சார்பதிவாளர் அஸ்வினை அவரது செல் போன் 9944224898 நெம்பருக்கு அவரது நெம்பர் 9500489932-ல் இருந்து தொடர்பு கொண்டு பணத்தை கொண்டு வந்து கொடுக்கச் சொன்னபோது அஸ்வின் அவரிடம் பார்ட்டி பணம் எடுக்க வங்கிக்கு சென்றுள்ளார் என்றும் வந்தவுடன் கொண்டு வருகிறேன் என்றும் சொல்லியுள்ளார். சிறிது நேரம் கழித்து சையத் என்பவர் சாமிநாதன் பத்திரவு பதிவு அலுவலகத்திற்கு சென்று பணம் ரெடியா என்று கேட்டுள்ளார். அதற்கு அஸ்வின் பார்ட்டி பணம் எடுக்க சென்றுள்ளார், அவர் வந்தவுடன் தருகிறேன் என்று சொல்லியுள்ளார். பின்னர் குணசேகரன் அவர்கள் சுமார் 3.20 மணிக்கு முத்திரைத்தாள் பத்திரம், பத்திரபதிவு கட்டணம் மற்றும் பத்திர எழுத்தர் கட்டணம் ஆகியவற்றை அஸ்வினுக்கு வங்கி மூலம் பணபரிமாற்றம் செய்துள்ளார். மேலும் சார்பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூ.60,000/-த்தை தனியாக அஸ்வினிடம் குணசேகரன் கொடுத்துள்ளார். பின்னர் மாலை சுமார் 4 மணியளவில் பணம் ரூ.60,000/- மற்றும் கிரையபத்திரத்துடன் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம் வந்து சார்பதிவாளரை அஸ்வின் சந்தித்து பத்திரத்தை கொடுத்து, பணம் இருக்கு என்று சொன்ன போது சையத் பாயிடம் கொடுத்து விடுங்கள் என்று சார்பதிவாளர் சொல்லியுள்ளார். பின்னர் சார்பதிவாளிடம் பத்திரத்திற்கு டோக்கன் போடவில்லை என்ற விபரத்தை அவரிடம் சொன்ன போது அவரும் பரவாயில்லை டோக்கன் போடாமலேயே இன்றே பதிவு செய்து தருவதாக அஸ்வினிடம் சொல்லியுள்ளார். பின்னர் சையத் பாயை பார்த்து பணம் ரெடியாக உள்ளது என்று அஸ்வின் சொன்னபோது சையத் இப்ராஹிம் சார்பதிவாளர் அஸ்வினை புதிய அலுவலகத்தின் அருகே உள்ள அலுவலக பயன்பாட்டில் இல்லாத பழைய அலுவலக

கட்டிடத்திற்கு அழைத்து சென்று அங்குள்ள உணவு அருந்தும் அறைக்குள் சென்று அஸ்வின் கொடுத்த பணம் ரூ.60,000/-ஐ பெற்று எண்ணிப்பார்த்து வைத்து கொண்டுள்ளார். சார்பதிவாளர் திரு.தமிழ்செல்வனின் மேஜையின் மீதிருந்து டோக்கன் போடாமல் இருந்த திரு.குணசேகரன் மற்றும் உமாமகேஸ்வரி என்பவர்களது பெயரில் பதிவு செய்யப்பட வேண்டிய கிரையப்பத்திரம் கைப்பற்றப்பட்டது. மேலும் வருகை பதிவேடு, அசல் டோக்கன் பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கை சம்மந்தமாக ஒரு நடவடிக்கை குறிப்பை சாட்சிகள் திரு.கு.சுப்ரமணியன், திரு.ப.சுபாஷ்சந்திரபோஸ், ஆய்வாளர் திருமதி பரிமளா தேவி, சார்-பதிவாளர் திரு.தமிழ்செல்வன் மற்றும் சையத் இப்ராஹிம் ஆகியோர்கள் முன்னிலையில் தயாரிக்கப்பட்டு கையொப்பங்கள் பெறப்பட்டது. மேலும் நடவடிக்கை குறிப்பு தயார் செய்யும் போது திரு.அஸ்வின், குணசேகரன் ஆகியோர்களை விசாரித்து அவர்கள் சம்மந்தமாக பக்கங்களில் இருந்து அவர்களிடம் கையொப்பங்கள் பெறப்பட்டது. அதன் நகல் ஒன்று சார்-பதிவாளர் திரு.தமிழ்செல்வன் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் போது திரு.தமிழ்செல்வன், சார்பதிவாளர், மேட்டுப்பாளையம் என்பவர் 7, 13(2) r/w 13(1)(d) of PC Act ன் படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவந்தது. மேலும் திரு.சையத் இப்ராஹிம், வயது-51 த/பெ அப்துல் சமது, கதவு எண்.15 பிள்ளையார் கோவில் வீதி, சிறுமுகை ரோடு, மேட்டுப்பாளையம் என்பவர் 7 r/w 12, 13(2) r/w 13(1)(d) of PC Act r/w 109 of IPC ன் படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவந்தது. திடீர் தணிக்கையில் கண்டுபிடித்த குற்றம் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, குற்ற அலுவலர்கள் (1) திரு.மா.தமிழ்செல்வன், சார் பதிவாளர், மேட்டுப்பாளையம் மற்றும் (2) திரு.சையத் இப்ராஹிம் த/பெ அப்துல் சமது ஆகியோர்கள் மீது இன்று 30.11.2017-ம் தேதி மாலை 17.00 மணிக்கு, கோயம்பத்தூர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.8/2017/AC/CB, U/s 7, 12, 13(2) r/w 13(1)(d) of PC Act and 109 IPC -யின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசலை சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

30.11.17

காவல்துணைகண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.